DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE FAST TRACK COURT (M.L) UTHAMAPALAYAM

Case No. STC.No.11/2026
Deposition of DW1

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.மஞ்சு |
| Father's / Husband Name | : | ராஜாராம் |
| Village | : | |
| Taluk | : | உத்தமபாளையம் |
| Calling | : | |
| Age | : | 31 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of September 2026.

புகார்தாரர் ஆஜர்.

<u>முதல் விசாரணை:</u>

1. புகார்தாரரை எனக்கு தெரியும். புகார்தாரரின் மனைவி உமா என்பவரிடம் நான் ரூ.1 லட்சம் சீட்டு 5 போட்டிருந்தேன். அதில் 2 சீட்டுகளை எடுத்துவிட்டேன். 3 சீட்டுகளை வேண்டாம் என்று கூறிவிட்டேன். நவம்பர் மாதம், 2025 வரை உமாவின் வங்கி கணக்கிற்கு நான் ரூ.12 ஆயிரம் செலுத்தியுள்ளேன். எனது குடும்ப சூழ்நிலையின் காரணமாக மீதி சீட்டு தொகையை கட்ட முடியவில்லை. நான் 9 மாதத்திற்கான ரூ.108000/- மட்டும் உமாவிற்கு செலுத்தவேண்டும். 10.08.2025 ல் நான் புகார்தாரரிடம் ரூ.650000/- பணம் வாங்கவில்லை மற்றும் காசோலையை கொடுக்கவில்லை. 2024 ல் நான் உமாவிடம் நிரப்பப்படாத கையொப்பம் மட்டும் செய்த காசோலையை கொடுத்தேன். நான் சீட்டு போட்டதற்கான இரசீதை தாக்கல் செய்கிறேன். அதில் உமா கையொப்பம் செய்துள்ளார். **மேற்படி இரசீது எ.சா.ஆ.1 ஆகும்.** (மேற்படி ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று புகார்தாரர்

தரப்பு ஆட்சேபணை பேரில் குறியீடு செய்யப்படுகிறது).

**2.** நான் உமாவின் செல்நம்பருக்கு போன் பே மூலம் 22.07.2023 முதல் 06.12.2025 வரை பணம் செலுத்தியதற்கான Screen shot யை தாக்கல் செய்கிறேன். **மேற்படி ஆவணம் எ.சா.ஆ.2 ஆகும்.** (மேற்படி ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று புகார்தாரர் தரப்பு ஆட்சேபணை பேரில் குறியீடு செய்யப்படுகிறது). நான் 29.10.2024 ம் தேதியன்று புகார்தாரருக்கு ரூ.95000/- Gpay மூலம் பணம் செலுத்தியதற்கான Screen shot யை தாக்கல் செய்கிறேன். **மேற்படி ஆவணம் எ.சா.ஆ.3 ஆகும்.** (மேற்படி ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று புகார்தாரர் தரப்பு ஆட்சேபணை பேரில் குறியீடு செய்யப்படுகிறது).

<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

**1.** புகார்தாரரை எனக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் 5, 6 வருடமாக தெரியும். வழக்கு சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் தெரியும். தாவா காசோலை மற்றும் அதிலுள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். 10.08.2025 ல் புகார்தாரரிடம் நான் ரூ.650000/-த்தை பெற்றுக்கொண்டு காசோலையை கொடுத்தேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் இல்லை, மருத்துவமனையில் இருந்தேன். ம.சா.ஆ.4 ன் படி நான் வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரருக்கு பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. எ.சா.ஆ.1 ஆன ஆவணத்தை எந்த அச்சகத்திலும் எளிதாக அச்சடித்து வாங்கி கொள்ளலாம் என்றால் சரிதான்.

2. எ.சா.ஆ.1 ஆன ஆவணத்திலுள்ள கையொப்பம் யார் வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளலாம் என்றால் சரியல்ல. எ.சா.ஆ.1 ஆன ஆவணம் வழக்கிற்காக என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றும், உண்மையான ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. எ.சா.ஆ.1 ஆன ஆவணத்தில் அதிகமாக அடித்தல், திருத்தல் உள்ளதால் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது வங்கி கணக்கில் பணம் இல்லை என்பதை தெரிந்து கொண்டு புகார்தாரரை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் காசோலையை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

புகார்தாரருக்கும், எனக்கும் உள்ள வரவு செலவானது காசோலை படி உண்மையான வரவு செலவு என்றால் சரியல்ல. நான் வருமான வரி செலுத்துவதில்லை. ஒரு வருடத்திற்கு எனது வங்கி கணக்கில் வரவு செலவு செய்கிறேன் என்றால் ரூ.2, ரூ.3 லட்சம் இருக்கும். எ.சா.ஆ.2 மற்றும் எ.சா.ஆ.3 வழக்கிற்க்கு சம்மந்தமில்லாத ஆவணம் என்றும்,போலியான ஆவணம் என்றால் சரியல்ல. புகார்தாரர் மீதும், அவரது மனைவி மீதும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. காசோலை தொகையை திருப்பி கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் இல்லை.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.09.10 17:24:44 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam